STATE LEGISLATURE
19 MAR 1966

MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 9th November 1965.

The house met in the Assembly Chamber, *Fort St. George*, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

ஆற்று நீர் இறைப்புத் திட்டங்கள்

** 361 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) ஸ்ரீவைகுண்டம் அணைத்திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப் பட்டுள்ள, River Pumping Scheme *எவை ?*

(இ) அத்திட்டங்கள் எப்போது மேற்கொள்ளப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார்தோப்புக் கிராமத்தில் ஆற்றுநீர் இறைப்புத் திட்டம் ஒன்று.*

(இ) வேளாண்மைத் துறை நெறியாளர், விரிவான செயற் குறிப்புகளைத் தயாரித்து வருகிறார்.

(*a*) River Pumping Scheme at Alwarthope village, in Tirunelveli district.

(*b*) Detailed proposals are being formulated by the Director of Agriculture.

வயலி மலையடிப்பட்டி ஏரி

** 362 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், வயலி மலையடிப்பட்டி ஏரி அபிவிருத்தித் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(இ) அதன் உத்தேசச் செலவென்ன ?

(உ) அத்திட்டத்தால் எத்தனை ஏக்கர் நிலம் அதிகப்படி சாகுபடிக்கு வரும் ?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ) காக்கா நதியில் எவ்வளவு தண்ணீர் வருகிறது என்பதை நிச்சயிக்க பருவ மழைக் காலங் களில் சில ஆண்டுகளுக்காவது புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டியுள்ளது ; கிடைக்கக்கூடிய நீர் வசதியைப் பொறுத்துத் தான், இப்புதிய நீர்த் தேக்கங்களைக் கட்டுவதற்கு இடமுண்டா*

[9th November 1965

என்று பார்க்கவேண்டும். எனவே, வயலி, மலையடிப்பட்டி ஏரிகளைப் புதுப்பிக்கும் பணி, மேற்சொன்ன புள்ளி விவரங்கள் கிடைத்த பிறகுதான் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

கண்ணுப்புளிமெட்டில் அணைகள்

* 363 கேள்வி—திரு. கோ. சி. மணி : திரு. ஆ. கு. சுப்பையா : } கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையிலுள்ள கண்ணுப்புளிமெட்டு என்னுமிடத்தில் இரண்டு அணைகள் கட்ட வேண்டுமென்று கோரி செங்கோட்டை நகராட்சியிடமிருந்து தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. சி. மணி : திருநெல்வேலி மாவட்டத்தில் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்தபோது, அந்தச் சமயத்தில் ஒரு மகஜரை அமைச்சர் அவர்களிடம் பொதுமக்கள் கொடுத்து, அந்த இடம் பார்வையிடப்பட்டு வேலை தொடங்குவதாக வாக்குறுதி அளித்துவந்ததாகக் கூறப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் நகரசபையைப்பற்றிச் சொல்லுகிறார்கள். ஆனால் விவசாயிகள் சார்பாகத்தான் ஒரு மனு கொடுக்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : விவசாயிகள் சார்பாகக் கொடுக்கப்பட்ட அந்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் அதைப் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. அந்த வேலை தொடங்கினால் தோப்புக்கள் பாதிக்கப்படும் என்று கூறுகிறார்கள். அதை ஃபுட் ப்ரொடக்ஷன் கமிஷனர் பார்த்து, மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யோசிக்கப்பட்டுவருகிறது.

கீழ்ப் பெரம்பலூர் வடக்கு ஏரி

* 364 கேள்வி—திரு. இரா. நாராயணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், கீழ்ப்பெரம்பலூர் கிராமத்திலுள்ள வடக்கு ஏரியை உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் மராமத்து செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?